உ

கணபதி துணை



காரைநகர் மணற்காடு அம்மன்கோவிலடியைச் சேர்ந்த
பாரத்வாஜ கோத்ரர் அமரர் சிவஸ்ரீ. சோமசுந்தர ஐயர்
அவர்களின் புதல்வரான

# சிவஸ்ரீ. சதாசிவக்குருக்கள்

அவர்கள் இறைவனடி சேர்ந்தமை குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

13. 04. 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் காரைநகர் மணற்காடு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த, பாரத்துவாஜ கோத்திரர், அமரர். சிவஸ்ரீ. சோமசுந்தர ஐயர்அவர்களின் புதல்வரான

# சிவஸ்ரீ. சதாசிவக்குருக்கள்

அவர்கள் சிவபதமடைந்த ஞான்று வழங்கப்பட்ட

# இரங்கற் பாக்கள்

★★★★★★★★★★★★★★★

## திதி வெண்பா

ஈசுவர ஆண்டு இயம்பு பங்குனித் திங்கள்
பேசும் சனிவாரம் பிறைவளரும் - தேசுடைய
சீரான அஷ்டமியே சிவபதம்சேர் பரத்வாஜிப்
பேராளன் சதாசிவனின் பேறு.

## விருத்தம்

ஈழத்தின் சிதம்பரமாய் இலங்கும் திருத்தலத்தில்
சூழன்பர் அந்தணராம் சோமசுந்தரர் புதல்வர்
ஆழமாய்க் கற்றவராம் ஆசிரியராய்த் திகழ்ந்தார்
சோழத்தின் வழிவந்த சுந்தரத்துச் சதாசிவனார்.

வேதியர்கள் மிகுதியாய் விரவு மணற் காடுதனில்
பாதிமதி சூடினோன் பதம்பணிந்து பூசனைசெய்
ஆதிமுதல் வழிவந்த அந்தணர்கள் பெறும் வருவாய்
மீதியுள்ள சோதரர்க்கு மிகவிரும்பித் தானீந்தார்.

உரும்பராய்ப் பதிமேவி உயர்பணியே ஆற்றினார்
அருந்தவத்தால் மனையாட்டி அம்மாள் புவனேஸ்வரியாக
பெரும் செல்வமாம் மக்கட் பேற்றையுமே மிகப் பெற்று
விரும்பி நீர்வைப்பதியில் வீடும் சிறப்பாயமைத்தார்.

ஆசிரியராய்ப் பணியை ஆற்றும் போதும் தனது
மாசிலந்தணர் குலத்தின் மறைஓதும் வழிநின்றார்
காசி விசுவேசுவரனைக் கைதொழுது சிவபூசை
ஆசியுடனே பெற்றார் ஆசாரிய அபிஷேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பத்து ஐந்தென்னும் ஆண்டதனில் ஆசிரியச்
சம்பத்து எனும்பணியைச் சதமல்ல எனவிடுத்து
விம்பத்தில் ஈசுவரனை வேட்ட சிவாசாரியராய்
ஓம்பதின் பத்துவரை இயற்றினார் அருந்தவமே.

ஓராண்டு பதின்மூன்று உறும் சாந்த்ர மாதங்களால்
பேராண்டு தொண்ணூறில் பிறை ஆயிரம் மேற்கண்ட
சீராளன் அந்தணன் சிரோன்மணிச் சதாசிவராம்
பேரான் சிவபதத்தைப் பெற்றான் பெரும் பேறே.

## தேற்றம்

## வெண்பா

பிறப்பவர்கள் யாவருமே பேறுகளைப் பெற்றாலும்
இறப்பதுதான் உலகத்தின் இயல்பன்றோ – மறப்பதுபோல்
பெருந்தவத்தால் சிவபதமே பெற்றசதா சிவருக்காய்
வருந்தாதீர் இனிச் சாந்தி வாழி.

ஆக்கம்:
'ப்ரஹ்ம ஸமூக ஸேவா விபூஷண'
'சிவத்தமிழ் ஞானாகரம்'
'ஆன்மீக விடுதலைப் பணியாளர்'
சிவாச்சார்யர்–சோதிஷர்
சிவஸ்ரீ. பஞ்சாக்ஷர வித்தியானந்தக்குருக்கள்
Schulte - Hordelhofstr - 10
44866 Bochum, Germany.
Tel & Fax:- 02327- 21201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

05
08
1908
தோற்றம்



04
04
1998
மறைவு

## சிவஸ்ரீ. சோமசுந்தர ஐயர் சதாசிவக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நீர்வேலி வாத்தியார் நிலவுலகை நீத்திட்ட சேதிகேட்டு ஆறாத்துயருடன் வாரி இறைத்திடும் கண்ணீர் அஞ்சலி

## சிவாகம வித்வான்-கலாநிதி சோமாஸ்கந்தக்குருக்கள்

**சைவமகாசபை ஸ்ரீ பாலமுருகன் தேவஸ்தான சிவாச்சார்யர்**

(அவுஸ்திரேலிய இந்துக் குருமார் கவுன்சில் மேற்குமாநிலப் பிரதிநிதி)

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்ற சிவஸ்ரீ. சதாசிவக்குருக்களை எல்லோரும் ஐயா வாத்தியார் என்றும், நீர்வேலி வாத்தியார் என்றும் அன்புடன் அழைப்பார்கள். என்னையும் தனது சொந்த மகனைப்போல அன்பு பாராட்டியும், வேண்டியபோதெல்லாம் கூட இருந்து உதவி புரிவதுடன், தனது முதிர்ந்த அனுபவபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கி எமது குடும்பத்தவர் அனைவரது உள்ளங்களிலும் தனக்கென ஒரு தனியிடத்தைத் தேடிக்கொண்ட உத்தமர். அவரைப் பல கும்பாபிஷேகங்களிலும், மஹோற்சவங்களிலும் சிவாச்சாரியராகக் கலந்துகொண்டு சமயசேவை புரியவைத்த பெருமை என்னையே சாரும் என்று அடிக்கடி எல்லோர் முன்னிலையிலும் என்னைப் புகழ்வார். பலவருடங்களாக நான் அவரைப் பிரிந்திருந்தாலும் அடிக்கடி அவரைப்பற்றிய சிந்தனையும், பேச்சும் எம்மிடையே தோன்றிக்கொண்டேயிருக்கும். அவரது மகன் எனது மைத்துனியின் கணவர் ஆவார். வாத்தியார் மாமாவின் அருமை மனைவியாரும் எவரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் பெருங்குணம் படைத்தவர். அவர்கள் தமது இல்லறத்தின் தவப்பயனால் ஈன்றெடுத்த அத்தனைபேரும் நன் முத்துக்களுக்கு ஒப்பானவர்கள். பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்வரை கண்டு மகிழ்ந்த அந்தத் தம்பதிகளில், தலைவன் மறைந்தது மாபெரும் பேரிடியைப் போன்றதேயாகும். அவரது பிரிவால் மனங்கலங்கிய குடும்பத்தவர், மற்றும் அனைவருக்கும் ஆண்டவன் ஆறுதலும், தேறுதலும் தந்து, அமரர் சதாசிவக் குருக்களின் ஆத்மாவைத் தனது பாதங்களில் இளைப்பாறச் செய்யுமாறு இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

**சுன்னாகம். நா. சோமாஸ்கந்தக் குருக்கள். நா. சர்வேஸ்வரக் குருக்கள்.**
**ஜேர்மனி. சோ. ஸ்ரீகரக்குருக்கள். சோ. துளசிகாந்த சர்மா**
**ஜேர்மனி. இ. மகேசக் குருக்கள் குடும்பத்ினர் அனைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் காரைநகர் மணற்காடு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த, பாரத்துவாஜ கோத்திரர், அமரர். சிவஸ்ரீ. சோமசுந்தர ஐயர்அவர்களின் புதல்வரான

# சிவஶ்ரீ. சதாசிவக்குருக்கள்

அவர்களது

# வாழ்க்கைச் சுருக்கம்

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

பாரத்துவாஜ கோத்திர வழித்தோன்றலாக வந்த காரைநகர் மணற்காடு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சிவஸ்ரீ. சோமசுந்தர ஐயர் அவர்களுக்கும் அவரது தர்மபத்தினி காமாட்சி அம்மாள் அவர்களுக்கும் புண்ணிய புத்திரராக சிவஶ்ரீ. சதாசிவக்குருக்கள் அவர்கள் அவதரித்தார்.

இவர் உடன்தோன்றல்கள் ஸ்ரீமதி. சிவபாக்கியம் சபாரத்தின ஐயர், சிவகடாட்சசர்மா, சிவசர்மா, சாம்பசிவஐயர் ஆகியோராவர். இவர்களனைவரும் இவர்மாட்டு அளவிலாப் பேரன்புடையவர்களாக வாழ்ந்து மறைந்தனர்.

இவருக்கு உரிய காலத்திலே பெற்றோர் நீர்வேலி ஜெகந்நாதக் குருக்கள்-பொன்னம்மாள் அவர்களது சிரேஷ்ட புத்திரி புவனேஸ்வரி அம்மாளை விவாகம் செய்வித்து வைத்தார்கள். இவர்களாற்றிய மங்கல மனையறத்தின் நற்பலனாக ஞானேஸ்வரி, சத்தியோஜாதசர்மா, விமலாதேவி, தேவசேனாபதி, சாந்தாதேவி, சத்தியஜெயசர்மா ஆகிய புதல்வர்களைப் பெற்று மகிழ்ந்தனர்.

இவர்களுள் ஞானேஸ்வரிஅம்மா அவர்கள் ஆலங்குழாயைச் சேர்ந்த பாரத்துவாஜ கோத்திரர் சிவஸ்ரீ. இரத்தினேஸ்வரக்குருக்களின் புத்திரர் சோமாஸ்கந்தக்குருக்களை மணம்முடித்து, இவர்கள் வழித்தோன்றல்களாக கனகசபேசக்குருக்கள், அமரர் சரோஜா, ஜெயஸ்ரீ, இராமச்சந்திரக்குருக்கள், வசந்தி, குகானந்தசர்மா, ஸ்ரீகாந்தசர்மா, ஸ்ரீதரசர்மா ஆகிய பேரப்பிள்ளைகளையும் பெற்றார்.

இப்பேரப்பிள்ளைகளுள் கனகசபேசக்குருக்கள் நவிண்டில் இரங்கநாதசர்மாவின் புதல்வி மீனாவையும், ஜெயஸ்ரீ என்பவர் உரும்பராய் சபாரத்தினக்குருக்களின் புத்திரர் பரமேஸ்வரக்குருக்களையும் மணம்புரிந்து, ஜெயஸ்ரீ-பரமேஸ்வரக்குருக்கள் வழித்தோன்றலாக கருணாகரவிசாகன் என்னும் பீட்டப்பிள்ளையையும், பேரனான இராமச்சந்திரக்குருக்கள் பலாலி குமாரசாமிக்குருக்களின் புதல்வி நகுலாவை மணந்து, இவர்களின் வழித் தோன்றலாக நிஜோயினி, பிரசாந் ஆகிய பீட்டப்பிள்ளைகளையும், வசந்தி எனப்படும் பேர்த்தி யாழ்ப்பாணம் சந்திராஐயர் அவர்களின் புதல்வர் இரகுபதிசர்மாவை மணம்புரிந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வழித்தோன்றல்களாக ஜனகசர்மா, சரண்யா, ஜெயச்சந்திரன் ஆகிய பீட்டப்பிள்ளைகளையும், பேரனான குகானந்தசர்மா உரும்பராய் முத்துக்குமாரசாமிக்குருக்களின் மகள் ஜெகதாம்பாளை மணந்து, இவர்களின் வழித்தோன்றல்களாக அமரர் ஸ்ரீராம், கார்த்திகா, ராம்குமார் ஆகிய பீட்டப்பிள்ளைகளையும், ஸ்ரீகாந்தசர்மா என்னும் பேரன், மட்டக்களப்பு சுந்தரேஸ்வரக்குருக்களின் புதல்வி விஜயஸ்ரீயை மணம் புரிந்து, இவர்கள் வழித்தோன்றல்களாக கார்த்திக், பிரதீப், சௌமியா ஆகிய பீட்டப்பிள்ளைகளையும், பேரன் ஸ்ரீதரசர்மா குடும்பத்தையும் பெற்று மகிழ்ந்தார்.

மகன் சத்தியோஜாதசர்மா அவர்களுக்கு சுருவில் நடராசக்குருக்கள் அவர்களின் புத்திரி வித்தியாதேவி அம்மாளை மணம்புரிவித்து, இவர்கள் வழித்தோன்றல்களாக சத்தியதேவி, சத்தியரூபக்குருக்கள், வனஜா, ஸ்ரீலேகா, சத்தியரூபா ஆகிய பேரப்பிள்ளைகளையும் பெற்று, இவர்களுள் சத்தியதேவி என்பவர் யாழ்ப்பாணம் நடனசபாபதிசர்மாவின் புத்திரன் கோபிரமணசர்மாவை மணம் புரிந்துகொண்டார். வனஜா என்பவர் கிளிநொச்சி பரமசாமிக்குருக்கள் அவர்களின் புதல்வரான ஜெதீஸ்வரசர்மாவை மணந்து, இவர்களின் வழித்தோன்றலாக பிரசாதனன் என்னும் பீட்டப்பிள்ளையையும், ஸ்ரீலேகா என்பவர் மாதகல் இரத்தினக்குருக்கள் அவர்களின் புதல்வரான முரளிதரசர்மாவை மணந்துகொண்டு, இவர்கள் வழித்தோன்றலாக ஆத்மிகா என்னும் பீட்டப் பிள்ளையையும் பெற்றதுடன்:

மகள் விமலாதேவி என்பவர் அச்சுவேலி முத்துசுவாமிக் குருக்களின் புதல்வரான சிவசுப்பிரமணியசர்மாவை மணந்துகொண்டு, இவர்களின் வழித்தோன்றல்களாக கமலாதேவி, ஜெயபாலசர்மா, சுலோசனாதேவி, பத்மாதேவி, சிவபாலசர்மா, ஜெயதேவி ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்று;

கமலாதேவி என்பவர் சுன்னாகம் மகாலிங்கசர்மா அவர்களின் புதல்வரான குமாரசதாசிவசர்மாவை மணந்து, இவர்களின் வழித்தோன்றல்களாக பாலரூபன், திவாகரன் ஆகிய பீட்டப் பிள்ளைகளையும், பேரனான ஜெயபாலசர்மா ஆவரங்கால் கௌரிசங்கரசர்மா என்பவரின் புதல்வியான செண்பகவல்லியை மணந்து இவர்களின் வழித்தோன்றல்களாக சிந்துஜா, சுமஜா, சிவஅகமஜெயன். ஆகிய பீட்டப்பிள்ளைகளையும் கண்டு;

பேர்த்தி சுலோசனாதேவி புங்குடுதீவு கணேசராசக்குருக்களின் புதல்வரான சுவாமிநாதக்குருக்களை மணந்து இவர்களின் வழித்தோன்றல்களாக சக்திதரன், பிரவீணா, தரண்யா ஆகிய பீட்டப் பிள்ளைகளையும், பத்மாதேவி என்பவர் மட்டக்களப்பு தியாகராஜக் குருக்களின் புதல்வரான கமலராஜசர்மாவை மணந்துகொண்டு, பேரனான சிவபாலசர்மா என்பவர் நல்லூர் குமாரசாமிக்குருக்களின் புதல்வியான மீனலோசனியை மணந்து, இவர்களின் வழித்தோன்றல்களாக ஸ்ரீவத்ஸன், விஸ்வதிகா ஆகிய பீட்டப்பிள்ளைகளுடன், பேர்த்தி ஜெயதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் சுழிபுரம் சண்முகசுந்தரக்குருக்களின் புதல்வரான மோகனசுந்தரசர்மாவை மணம்புரிந்து கொண்டு;

மகள் தேவசேனாபதி என்பவர் இந்தியாவைச் சேர்ந்த விஸ்வநாத ஐயரின் புதல்வரான மாணிக்கஐயர் (அமரர்) அவர்களைத் திருமணம் புரிந்துகொண்டு இவர்களின் வழித்தோன்றலான ஜெயந்தி என்னும் பேர்த்தி, நீர்வேலி சாம்பசதாசிவக்குருக்களின் புதல்வரான சோமதேவக்குருக்களை மணந்து, இவர்களின் வழித்தோன்றல்களாக வரப்பிரதசர்மா, சிவஜெயன், நிதர்சன், சிந்துகேயன், மனுப்பிரியா ஆகிய பீட்டப்பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டதுடன்;

மகளான சாந்தாதேவி நீர்வேலி சுவாமிநாதக்குருக்களின் புதல்வரான கனகசபாபதிசர்மாவை மணந்து இவர்களின் வழித்தோன்றல்களாக மீரா, பாலமுருகசர்மா ஆகிய பேரப் பிள்ளைககளுடன்;

மகனான சத்தியஜெயசர்மா கந்தர்மடம் தியாகராஜசர்மாவின் புதல்வியான கீதா என்பவரை மணந்து, இவர்களின் வழித்தோன்றலாக பிரார்த்தனா என்னும் பேரப்பிள்ளையையும் பெற்றுத் தமது வழித்தோன்றல்கள் மாண்புமிகு மனையறம் நடாத்தும் சிறப்பையும் கண்ணாரக் கண்டுகளித்தார்.

இவர் காரைநகர் வலந்தலையிலுள்ள தமிழ்ப் பாடசாலையிலும், பின்னர் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும், ஆசிரியராகப் பணியாற்றி தனது 55வது வயதினிலே இளைப்பாறினார். அதன் பின்னர் ஆச்சாரிய அபிஷேகம் (குருப்பட்டம்) செய்யப்பெற்று இலங்கையின் பலபகுதிகளிலும் பலரும் பாராட்டும்வண்ணம் சமயத் தொண்டுகளுடன் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பணியாற்றி வந்தார்.

இத்தனை நிறைந்த வாழ்வு பெற்றுக்கொண்டவர் ஈசுர வருஷம் பங்குனி மாதம் 21ம் நாள் (04.04.1998) சனிக்கிழமை பிற்பகல் பூர்வபக்க அஷ்டமித் திதியும் புநர்பூச நட்சத்திரமும் பொருந்திய வேளையில் "வினைபோதம் ஒழிந்தால் காயம் தினைப்போதும் நிலையாது" என்பதற்கிணங்க மக்கள், மருமக்கள், பேரரும், பீட்டரும், கொப்பாட்டரும், சுற்றமும், அயலாரும் சூழ்ந்து துயர்சூர்ந்து கதற இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை நாடினார். அவரது ஆத்மா சாந்தியடைய நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

சுபம்.

இவ்வண்ணம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பீட்டப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மார்க்கண்டேயர் அருளிய

# ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம்

ருத்ரம் பசுபதிம் ஸ்தாணும் நீலகண்டம் உமாபதிம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

காலகண்டம் கலாமூர்த்திம் காலாக்நிம் காலநாசகம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

அநந்தம் அவ்யயம் சாந்தம் அக்ஷமாலாதரம் ஹரம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

ஆனந்தம் பரமம் நித்யம் கைவல்யம் பதகாரணம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

தேவதேவம் ஜெகந்நாதம் தேவேசம் விருஷபத்வஜம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

ஸ்வர்கா பவர்க தாதாரம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்த காரணம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

கங்காதரம் சசிதரம் சங்கரம் சூலபாணிணம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் நாகாபரண பூஷிதம்।
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி॥

மார்க்கண்டேய க்ருதம் ஸ்தோத்ரம் ய: படேத் சிவ சந்நிதௌ।
தஸ்ய ம்ருத்யுபயம் நாஸ்தி ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்
### நாலாம் திருமுறை - திருநாவுக்கரசு நாயனார்

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற் றென்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

## திருவாசகம்
### எட்டாம் திருமுறை - மணிவாசகப் பெருமான்

இற்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுமுறை சிவனே
ஒன்று நீயல்லை யன்றியொன்
றில்லை யாருன்னை யறிகிற் பாரே.

## திருவிசைப்பா
### ஒன்பதாம் திருமுறை - கண்டராதித்தர்

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிர வர்நின்னோடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும் தென் தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

## ஒன்பதாம் திருமுறை - சேந்தனார் பெருமான்

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

## ஏழாம் திருமுறை - சேக்கிழார் பெருமான்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

## அருணகிரிநாதர்

அபகார நிந்தைபட்(டு) உழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனோ
இபமா முகன்தனக்(கு) இளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

✤✤✤✤✤✤✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு. சதாசிவ ஐயா என்னும் அணையாத விளக்கு

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து கடந்த 04.04.1998ல் சிவபதமடைந்த திரு. சதாசிவஐயா அவர்களின் நினைவாஞ்சலியில் அன்னாரைப் பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதே.

திரு. சதாசிவஐயா அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு மிகவும் கவலையுற்றோம். ஐயா அவர்கள் சப்த தீவுகளில் ஒன்றாகிய பெயர்பூத்த காரைதீவில் பிறந்து நீர்வேலியென்னும் எழில்மிக்க கிராமத்தில் வசித்துவந்தார். உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து பல நூற்றுக்கணக்கானோரின் வாழ்வில் கல்வியறிவூட்டி அவ்வூருக்குப் பெயரும் புகழும் சேர்த்தார்.

தம்மை நாடி வருவோர்க்கு இன்முகம்காட்டி வரவேற்கும் பண்புடையவர். இல்லாதவர்க்கு ஈதல், இரப்போரைப் பேணுதல், இறந்தோருக்கு இரங்குதல் என்னும் தனக்கே உரித்தான வாழ்க்கை நெறிகளினால் மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, முன்மாதிரியாக வாழ்ந்தவர்.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.


மற்றவர்களையும் அறநெறியில் ஒழுகச் செய்து, தாமும் அறம் தவறாத இல்வாழ்க்கை நடத்துவார்களெனின் தவம் செய்வோரைவிட அதிக சிறப்பும், வல்லமையும் பெற்றவர்களாவர்.

வள்ளுவப் பெருமானின் இவ் அருள்வாக்கிற்கு ஏற்ப திரு. சதாசிவஐயா அவர்கள் அறநெறி தவறாத இல்வாழ்க்கை வாழ்ந்தவர். அன்னாரின் பிரிவு, நீங்காத சோகமாக காலமெல்லாம் நிலைத்து நிற்பது நிச்சயம். அன்னார்தம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

சுதாகரன் குடும்பத்தினர்.
Neunkirchen (Saar)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிகழும் ஈசுவர வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் சனிக்கிழமை (04.04.1998) பிற்பகல் பூர்வபக்க அஷ்டமி திதியும், புனர்பூச நட்சத்திரமும் கூடிய வேளையில் இறைவனடி சேர்ந்த

**சிவஸ்ரீ. சோ. சதாசிவக்குருக்கள் அவர்களின்**

அபரக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், செய்தியறிந்து அநுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும், எம்முடன் சேர்ந்து எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

13. 04. 98



**கணனி வடிவமைப்பு**
'பாலா' 44866 Bochum, Germany.
Tel & Fax:- 0049 2327 17962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org